279—

சுற்றுலாப் பூங்கா

***25789— திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வடக்கு தொகுதி, வண்டியூர் கண்மாய் கரையில் சுற்றுலாப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்கு தொகுதி, வண்டியூர் கண்மாய் கரையில் சுற்றுலாப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்கின்ற வினாவினை மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் வினவியிருக்கின்றார்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை இரயில் நிலையத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் வண்டியூர் கண்மாய் அமைந்துள்ளது. இக்கண்மாயில் மழைக்காலங்களில் மழைநீர் தேக்கி வைக்கப்படுகின்றது. இக்கண்மாய் உள்ளூர் மக்களின் பொழுதுபோக்குத் தலமாகவும் அமைந்திருக்கின்றது. சுற்றுலாத் துறையால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பூங்கா அமைத்தல் பணி அனுமதிக்க இயலாத பணி ஆகும். எனினும், மதுரை வண்டியூர் கண்மாய் கரையில் சுற்றுலாப் பூங்கா அமைக்கும் பணியினை மத்திய அரசினுடைய நிதியாதாரத்தினைக் கொண்டு, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ் செய்வது தொடர்பான செயற்குறிப்பின்மீது சுற்றுலா ஆணையரிடமிருந்து உரிய கருத்துரு பெற்று அதனை ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித்

2018 ஜூலை 5]

திட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டதா என்பதை ஆராய்ந்து, அதனடிப்படையில் தனியே நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரம்ப detailed ஆக பதிலைச் சொல்லிவிட்டார். எனவே, சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்தான். நன்றிதான், சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல கேள்வி நேரத்தை, ஒரே ஒரு நிமிடம் நன்றி சொல்கின்ற வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின், தமிழ்நாடு கிளையின் பொருளாளராக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தொடர்ந்து பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியதைப்போல, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நீண்டநாள் போராட்டமான, காவேரி உரிமையை மீட்டெடுக்கின்ற பணியில் வெற்றி கண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து பல்வேறு திட்டங்களை தமிழகத்துக்குக் கொண்டுவந்தமைக்கும், AIIMS மருத்துவமனையை மதுரைக்குக் கொண்டுவந்தமைக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்காக இடத்தை

ஒதுக்கீடு செய்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், குடிநீர்ப் பிரச்சினையில் முல்லைப் பெரியாறிலிருந்து குழாய்மூலம் மதுரை மாநகருக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டத்திற்காக 1,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில் AMRUT திட்டத்தை அமல்படுத்தி, நடைமுறைப்படுத்திய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிக் கல்வித் துறையின்மூலம் நூலக நிதியை வழங்கிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பொறியியல் கல்லூரிகளில் பட்டயப் படிப்பினைக் கொண்டு வந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டித் தந்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றுமுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வண்டியூர் கண்மாய் 688 ஏக்கர் பரப்பளவு கொண்டுள்ளது என்பதை தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் நன்கு அறிவார்கள். இதிலே பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, ஏற்கெனவே படகு குழாம், சிறுவர் பூங்கா, இரயில் வசதி போன்ற அனைத்தும் இருந்தன. அந்த 688 ஏக்கர் பரப்பளவு கொண்டுள்ள இந்தக் கண்மாயின் கரை பலப்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் பரிந்துரை கேட்டிருக்கிறார்கள். அந்தவகையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த வண்டியூர் கண்மாய் குறித்த கேள்வி வந்த நேரம் ஒரு மகிழ்ச்சியான நேரம் என்று நினைக்கிறேன். காரணம், நேற்றையதினம்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த வண்டியூர் கண்மாயைக் குடிநீர் ஆதாரத்திற்காக தூர் வாரிட அரசாணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்காக மதுரை மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வண்டியூர் கண்மாயைப் பலப்படுத்தும் முயற்சியை கண்டிப்பாக நீங்கள் தொடர்ந்து எடுக்க வேண்டும். மதுரை

2018 ஜூலை 5]

மாநகருக்கு, மூன்று இலட்சம் மக்கள் தினந்தோறும் வந்து செல்லக்கூடிய மாநகருக்கு, பூங்காக்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே, இதிலே மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் செயல்படும் அரசு, முயன்று வெற்றிகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான பணியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அருமை அண்ணன் அவர்கள் மீண்டும் இதை வலியுறுத்தியதன்பேரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றுவதற்கு, நிதிநிலைக்கேற்ப ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்கிற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்துவரும் மதுரை மாநகரில் தமிழ்நாடு விடுதி–2 மிக அற்புதமாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, அந்த தமிழ்நாடு விடுதியில் போதிய இடம் இருக்கின்ற காரணத்தால், நட்சத்திர அந்தஸ்து உள்ள விடுதியாக அதனை மாற்றக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கொடைக்கானல், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற இடங்களுக்குப் போகக்கூடிய சுற்றுலாப் பயணிகள் அந்த விடுதியை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அங்கு தற்போது 50 அறைகள் மட்டுமே இருக்கின்றன. போதிய இடம் இருப்பதால், அதை நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்த்தி, நல்ல வசதிகளை ஏற்படுத்தி மேம்படுத்துகிற திட்டம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2018 ஜூலை 5

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள், மதுரை தமிழ்நாடு ஹோட்டல் நட்சத்திர அந்தஸ்திற்கு உயர்த்தப்படுமா என வினவியுள்ளார்கள். இப்போது சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து தங்கும் இடங்களும், உணவு பரிமாறும் கூடங்களும் மிக, மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டு, நல்ல நிலையில் அனைத்து வசதிகளும், அம்சங்களும் கொண்டு, சுற்றுலாப் பயணிகள் தங்கி மகிழ்வுடன் பொழுதைக் கழிக்கின்ற வகையில் செயல்பாட்டில் உள்ளன. தற்சமயம் அனைத்துத் தங்கும் விடுதிகளும் நல்ல நிலையில் இருப்பதால்தான், சுற்றுலாப் பயணிகளுடைய வருகை மென்மேலும் அதிகரித்து, ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், இந்த நிதியாண்டில் சென்ற ஆண்டை விட 235 சதவிகிதம் அதிக இலாபத்தை ஈட்டக்கூடிய அளவிலே சுற்றுலாத் துறையினுடைய செயல்பாடு இருக்கின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ளபடி, நட்சத்திர அந்தஸ்திலேயே தங்கும் விடுதிகள் செயல்படுகின்றன என்கின்ற மேலான தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தின்படி வாழ்ந்து மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். குடிமராமத்து நாயகன், சேலத்தின் சிங்கம், தமிழகத்தின் விடிவெள்ளி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும்,

2018 ஜூலை 5]

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். சேலம் மாவட்டம், எனது வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில், மிகவும் பழமை வாய்ந்த, சிறப்புமிக்க சித்தர் கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு தார்ச் சாலை அமைக்க வேண்டி சுற்றுலாத் துறை மூலமாக நிதி ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சித்தர் கோயிலுக்கு தார்ச் சாலை அமைக்க வேண்டுமென்றும், அதை சுற்றுலாத் துறையின் சார்பாக நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் கோரிக்கையினை வைத்திருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை போன்றவற்றைக் கருத்தில்கொண்டும், அந்த இடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டும், மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு பெறப்பட்டு சுற்றுலாத் தலமாக அறிவிக்க, நிதி நிலைமைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அந்த வகையில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள சித்தர் கோயிலுக்கு எத்தனை கிலோ மீட்டர் நீளம் தார்ச் சாலை அமைக்க வேண்டும் என்ற தகவலை என்னுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயம் இந்த நிதியாண்டில் தங்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நிறைவேற்றித் தரப்படும் என்கின்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.